[24th January 1964

உதகமண்டலத்தில் அரசாங்க ஹோட்டல்

* 83 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் ஒரு அரசாங்க ஹோட்டல் கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

The staff of Agricultural College, Coimbatore

* 84 *Q.*—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there are any quarters for the members of the staff of the Agricultural College, Coimbatore;

(*b*) if so, how many;

(*c*) on what basis these quarters are allotted to the members of the staff;

(*d*) how many allottees have actually occupied the quarters; and

(*e*) how many allottees have sublet their quarters?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) There are 238 residential quarters out of which 3 quarters have been converted into twin quarters.

(*c*) Bungalows and 'A' type quarters are allotted to Gazetted Officers as per the Bungalow Allocation Rules. Other types of quarters are allotted to Non-Gazetted Officers as per the quarters Allocation Rules.

(*d*) Twenty-four Gazetted Officers have occupied 'A' & 'B' Grade Bungalows and 'A' type quarters. Two hundred and seventeen Non-Gazetted staff have occupied the remaining quarters.

(*e*) None.

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) 238 வீடுகள் உள்ளன. அவற்றில் 3 வீடுகள் இரண்டு குடித்தனம் இருப்பதற்கு ஏற்றவையாகச் செய்யப்பட்டுள்ளன.

(உ) பங்களா ஒதுக்கும் விதிகளையனுசரித்து பங்களாக்களும், 'A' டைப் வீடுகளும் கெஜட் பதிவு அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன. குடியிருப்புகளை ஒதுக்கும் விதிகளை அனுசரித்து மற்ற டைப் குடியிருப்புகள் என்.ஜி.ஓ. வினர்க்கு வழங்கப்படுகின்றன.